**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**O.S. No.318/2022**

| | |
|---|---|
| சாட்சியின் வரிசை எண் | **வா.த.சா. 3** |
| பெயர் | சதாசிவம் |
| த/பெ | நாராயணன் |
| வயது | 61 |
| ஊர் | கயத்துார் |
| வட்டம் | விக்கிரவாண்டி |
| மாவட்டம் | விழுப்புரம் |
| தொழில் | விவசாயம் |

மேற்படி சாட்சி இன்று 05.08.2026 நீதிமன்றத்தில் ஆஜராகி உறுதிமொழி சட்டம் 1969 பிரிவு 6 ன் படி அமர்வு எழுத்தரால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியும் கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் 3வது நபர். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கின் விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். இதில் என்னை வாதி தரப்பில் மூன்றாவது சாட்சியாக விசாரித்துகொண்டு எனது தரப்பு முதல் விசாரணை சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சர்வே எண்ணுக்குரிய நான்கு எல்லைகள் தெரியுமா என்றால் தெரியும். அன்னம்மாள் நிலத்திற்கும் தெற்கு, மாரியம்மன் கோவில் நிலத்திற்கும் மேற்கு, தனபால் மனைக்கு கிழக்கு, கண்ணியப்பன் நிலத்திற்கும் வடக்கு, தேவகி எனக்கு என் சொந்தம் என்றால் ஊர்க்காரர். தேவகியின் கணவர் ஏழுமலையுடன் பிறந்தவர்கள் அங்காளன், தனபால். நான் நீதிமன்றத்திற்கு வருவதற்கு முன்பாக வழக்கு சொத்து குறித்து ஏழுமலை பெயரில் ஆவணங்கள் எதுவும் பார்க்கவில்லை பார்ததததாக நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. வழக்கு சொத்தில் 6 செண்ட் தனபாலுக்கு பாத்தியமானது என்று அவரது மனைவி சொல்கிறார் என்றால் அது எனக்கு தெரியாது. தனபால் சொத்து தனியாக இருக்கிறது. ஏழுமலைக்கு அதே தெருவில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட

வேறு மனை இருக்கிறது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.ஏழுமலை எந்தெந்த ஆண்டுகளில் வீட்டு வரி ரசீது கட்டினார் என்று குறிப்பிட்டு நான் சொல்லவில்லை. தேவகியும் அது பற்றி என்னிடம் எந்த ஆவணத்தையும் காட்டவில்லை. நான் தேவகியின் உறவுக்காரர் என்றும் அதனால் அவருக்கு அனுசரணையாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியமானது சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்பாக கையெழுத்து செய்தார்.

(Sd/–S. Muthu Murugan)
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.